[திரு, எஸ், டி, சோமசுந்தரம்] [1981 மார்ச் 6

பட்டதில் பாதை போடப்பட்டு இருந்தாலும், செக்யூரிட்டி ரீசன்சுக்காக, இன்டஸ்டிரியல் செக்யூரிட்டிக்காக அதில் பொது மக்கள் போகக் கூடாது என்று சொல்லப்படுகிறது. அங்கே பணிசெய்கிறவர்களே தகுந்த பாஸ் இல்லாமல், அத்தாட்சி இல்லாமல் செல்ல முடியாது. இது எல்லாம் சரி என்று நான் சொல்ல வரவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. இவைகளை யெல்லாம் நேற்று இரவு 8 மணிக்குத்தான் தகவலாக அறிந்தேன். அதற்கு வேண்டிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு ஆர். டி. ஓ. அவர்களும், போலீஸ் அதிகாரி அவர்களும், அவர்களிடத்தில் பேசிக்கொண்டு இருக் கிறார்கள். (குறுக்கீடு) இப்போது வந்துள்ள தகவல்படி தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட முக்கியமான விஷயம் குறித்து நேரடியாகச் சென்று அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அங்கே சென்றுள்ளதாக எனக்கு எழுதி அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அரசு இந்தப் பிரச்னையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் இந்தப் பிரச்னை யில் அரசு எடுத்துக்கொண்டுள்ள அக்கறையைக் கவனத்தில் கொண்டு, உண்ணாவிரதம் இருப்பவர்களை அதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதை அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இத்தீர் மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. அறிக்கை அளித்தல்.

விதி 107 (1)-ன் கீழ்—திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 107-ன்கீழ் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச் சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 6ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் உடுக்குறியிட்ட சட்டமன்ற வினா எண் 117 (பழைய எண் 531) சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. அவ்வமயம் நடந்த விவாதத்தின்போது உறுப்பினர் திரு. சி. கோபால் அவர்கள் பின்வரும் துணை வினாவினைக் கேட்டிருந்தார்.

1981 மார்ச் 6] [திருமதி கோமதி சீனிவாசன்]

" மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கும் நேரத்தில் ஆண்டுக்கு 10 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டில் வடாற்காடு மாவட்டத்தில் எங்கேயாவது அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். "

அதற்கு, " பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் அமைப்பதைப் பற்றி ஒன்றும் தகவல் வரவில்லை" என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்க விரும்புகிறேன்.

" 1980–81-ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க உத்தேசித்திருந்த 10 இடங்களில் வடாற்காடு மாவட்டம் லத்தேரியும் ஒன்றாகும். (அரசு ஆணை எண் 1642, வேளாண்மைத் துறை, நாள் 18–8–1980-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.)"

5. பேரவை முன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன் :—

" பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து 1980-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ஆம் நாளிடப் பெற்ற கல்வித் துறையின் 2358-ஆம் எண் அரசாணையில் வெளியாகி, 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9-ஆம் நாளன்று பேரவை முன் வைக்கப் பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் ".

RULE-2.

Add the word "lawful" before the word "Instruction" in line 4 of the Note under Rule-2.